பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 09 | வியாழக்கிழமை | 25.09.2025 | அதிர்வு 055

## ட்ரம்ப் - அநுர நேரடிப் பேச்சு



ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி 06



# தங்காலைக்குச் சென்று மஹிந்தவைச் சந்தித்த இந்தியாவின் தூதுவர்

## இலங்கை அரசியல் நிலவரம் தொடர்பில் பேச்சு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு அம்பாந்தோட்டை, தங்காலையில் உள்ள கால்டன் இல்லத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றுள்ளது. 07

# பாகிஸ்தான் பிரதமரைச் சந்தித்த அநுர



ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அலுவலகத்தில் அமெரிக்க நேரப்படி நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது இலங்கை, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. 06




மன்னார் நகரப் பகுதியில் நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட மின் உற்பத்திக்கான 14 காற்றாலைகளையும் திட்டமிட்டபடி அமைக்கும் பணிகளைத் தடையின்றி தொடரும்படி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா உத்தரவிட்டிருக்கின்றார் என்ற செய்தியை நேற்று முன்தினம் காலை முரசு தலைப்புச் செய்தியிலும் என் பத்தியிலும் ‘எக்ஸ்க்ளூஸிவாக’ வெளியிட்டிருந்தோம்.

அது தொடர்பில் அரசினதும் ஜனாதிபதியினதும் தீர்மானம் அடங்கிய அறிவுறுத்தல் பெரும்பாலும் அன்றைய தினமே – செவ்வாய்க்கிழமை அன்றே – மன்னார் செயலகத்துக்கு கிடைக்கும் என்று கோடி காட்டி இருந்தோம்.

நாம் குறிப்பிட்டபடி அன்றைய தினமே மன்னார் செயலகத்துக்கு அது பற்றிய அறிவுறுத்தல் கடிதம் வந்து சேர்த்தது.

ஜனாதிபதியின் முடிவை அவரது தன்னிச்சையான தீர்மானம் என்று குறிப்பிட்டுள்ள இத் திட்டத்திற்கு எதிரான போராட்டக்காரர்கள், தங்கள் போராட்டம் தொடரும் என்று நேற்று 06



# ஆக்கபூர்வமான பல கருத்துகள், விவரங்களை இந்தியத் தூதருக்கு நேரில் எடுத்துரைத்தோம்!

## தமிழரசு எம்.பிகள் சந்திப்புக் குறித்து ரவிகரன் தெரிவிப்பு

(பா.சதீசன்)

தமிழர் தாயகப்பரப்பில் அரச கட்டமைப்புக்களினூடாக முன்னெடுக்கப்படும் நில ஆக்கிரமிப்புக்கள், இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் இந்திய அரசின் நிதி உதவியில் முன்னெடுக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலை நோயாளர் விடுதிஅமைக்கும் திட்டத்தை மீள ஆரம்பிப்பதுடன், முள்ளியவளை கலைமகள் வித்தியாலய வகுப்பறைத் தொகுதியின் கட்டுமானப்பணிகளை மீள ஆரம்பிப்பது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தம்மால் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதர் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் தம்மால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம். இதன்போது ஆக்கபூர்வமாக பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக நானும் இதன்போது பல்வேறு விடயங்கள் சார்ந்து கருத்துக்களை இந்திய தூதருக்குத் தெரிவித்திருந்தேன்.

மாகாணசபை முறைமையை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தியதே இந்தியா தான். ஆனால் தற்போது மகாணசபைகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட நிலையே உள்ளது.

மாகாணசபைத் தேர்தல்கள் நடாத்தப்படும் என்று கூறப்பட்டு வருகின்றபோதும் நீண்டகாலமாக மாகாணசபைத் தேர்தல்கள் நடாத்தப்படாமலுள்ளமையை சுட்டிக்காட்டினேன்.

தமிழர் தாயகப்பரப்பிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் தமிழ் மக்களுக்குரிய அதிகமான நிலப்பரப்புக்கள் சில திணைக்களங்களினூடாக அபகரிக்கப்பட்டுள்ளன. இதனால் எமது மக்கள் விவசாயம், கடற்றொழில், கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபடுவதில் பெருத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்தினேன்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச கட்டமைப்புக்களின் ஊடாக காணி அபகரிப்புக்கள் இடம்பெற்றுள்ள விதத்தை புள்ளிவிவரங்களின் மூலம் சுட்டிக்காட்டினேன்.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகள் தொடர்பிலும் அதனால் வடபகுதி தமிழ் மீனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

இந்திய நிதிஉதவியில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலையில் அமைக்கப்படவிருந்த நோயாளர் விடுதி இதுவரை அமைக்கப்படாமலுள்ளமை தொடர்பிலும் இதன்போது இந்தியத் தூதரின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், முள்ளியவளை பகுதியில் அமைந்துள்ள கலைமகள்வித்தியாலயத்தில் இந்திய நிதி உதவியில் முன்னெடுக்கப்பட்ட வகுப்பறை கட்டடத்தொகுதி அமைக்கும் வேலைத்திட்டம் இடைநடுவே கைவிடப்பட்டுக் காணப்படுகின்ற விடயத்தை தூதரின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தேன்.

என்னால் முன்வைக்கப்பட்ட சகலவிடயங்களிலும் கவனம் செலுத்துவார் எனத் தூதெ தெரிவித்திருந்தார்.

அதேவேளை இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைகின்ற விடயத்திலும் தாம் கவனம் செலுத்துவதாகவும் இதன்போது அவர் குறிப்பிட்டார்.

மேலும் அரசியல் ரீதியான பல்வேறு விடயங்களும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அந்தவகையில் ஆக்கபூர்வமான சந்திப்பாக அமைந்தது. கலந்துகொண்ட அனைத்துப் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆக்கபூர்வமாக தமது கருத்துக்களை முன்வைத்தனர் – என்றார்.



# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்

2025 ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தண்டனைச் சட்டத் திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்தோடு, வீடுகள், பாடசாலைகள், தடுப்பு மையங்கள் மற்றும் வீதிகள் போன்ற இடங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை



அதிகம் என அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதன்படி, கடந்த ஆண்டு 1,350 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும், இந்த ஆண்டின் முதல் 7 மாதங்களில் மட்டும் 1,126 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

# போதைப்பொருள் தகவல் வழங்க தொலைபேசி இலக்கம் அறிமுகம்




ஹெரோயின், ஐஸ், கொக்கெய்ன் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவலாக உள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, தமது மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிக் பொலிஸ் மாஅதிபரின் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு நேரடியாகத் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும் என பொதுமக்களுக்கு பொலிஸ் தலைமையகம் அறியப்படுத்துகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் வழங்கும் தகவல்களின் இரகசியத்தன்மை முழுமையாகப் பாதுகாக்கப்படும் என்று உறுதியளிப்பதாக பொலிஸ் தலைமையகம் ஒரு அறிக்கையை வெளியிட்டுக் குறிப்பிட்டுள்ளது.

நாட்டிலிருந்து போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதில் பொதுமக்கள் வழங்கும் ஆதரவை இலங்கை பொலிஸ் மிகவும் வரவேற்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, சம்பந்தப்பட்ட மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிக் பொலிஸ் மாஅதிபர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் தொலைபேசி இலக்கங்கள் பகிரப்பட்டுள்ளன.

மேல் மாகாணம் – சஞ்சீவ தர்மரத்ன (071 8591 991)
தென் மாகாணம் – கித்சிறி ஜயலத் (071 8591 992)
ஊவா மாகாணம் – மகேஷ் சேனாநாயக்க (071 8592 642)
சபரகமுவ மாகாணம் – மஹிந்த குணரத்ன (071 8592 618)
வடமேல் மாகாணம் – அஜித் ரோஹண (071 8592 600)
மத்திய மாகாணம் – லலித் பதிநாயக்க (071 8591 985)
வடமத்திய மாகாணம் – புத்திக சிறிவர்தன (071 8592 644)
வட மாகாணம் – டி.சி.ஏ. தனபால (071 8592 645)
கிழக்கு மாகாணம் – வருண ஜயசுந்தர (071 8592 640)

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் வருமானம் அதிகரித்தது




2025 – 2026 நிதியாண்டின் முதல் 5 மாதங்களில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் பயணிகள் வருவாய் 10 சதவீதம் அதிகரித்துள்ளது.

பயணிகளின் எண்ணிக்கை 22 சதவீதமும், விமானங்களின் திறன் 10 சதவீதமும் அதிகரித்துள்ளதாகவும் விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் நேரந்தவறாமை செயல்திறன் 74 சதவீதமாக அதிகரித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டு 69 சதவீதமாகக் காணப்பட்டது.

மேலும் நீண்டகாலமாகச் சேவைகளிலிருந்து விலக்கப்பட்டிருந்த 2 விமானங்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மற்றொரு விமானம் மீண்டும் சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் அறிவித்துள்ளது.




# இலத்திரனியல் அடையாள அட்டையை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டம்

இலத்திரனியல் அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம்திட்டமிட்டுள்ளதாகடிஜிட்டல்பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர், எதிர்வரும் 2026 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படும் எனவும் கூறியுள்ளார்.

இலத்திரனியல் அடையாள அட்டை, ஒரு நபரின் அடையாளத்தை சரிபார்ப்பதை எளிதாக்கும் என்றும் மரபணு தரவுகளைப் பாதுகாப்பாக சேமிக்கும் என்றும் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக, அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆவணச் சான்றிதழின் தேவையும் குறைவடையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் அடையாள அட்டை அமுலுக்கு வந்ததன் பின்னர், நிகழ்நிலை மோசடிகள் கட்டுப்படுத்தப்படும் என பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் தினமும் புதிதாக 15 பேருக்கு மார்பகப் புற்றுநோய்

இலங்கையில் தினமும் சுமார் 15 புதிய மார்பகப் புற்றுநோய் சம்பவங்கள் பதிவாகின்றன. அதே நேரத்தில் ஒவ்வொரு நாளும் சுமார் மூன்று பெண்கள் இந்த நோயால் உயிரிழக்கின்றனர் என காதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் இயக்குநர் ஸ்ரீனி அழகப்பெரும இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

பதிவு செய்யப்பட்ட தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் 19,457 பெண் புற்றுநோய் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றில், 5,477 பேர் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களாவர்.

மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது வெற்றிகரமான சிகிச்சைக்கு வழிவகுக்கும் என்றபோதிலும், சுமார் 30வீதமான நோய்கள் தாமதமாகவே கண்டறியப்படுகின்றன.

இதனால் சிகிச்சை மிகவும் கடினமாகிறது என்று மருத்துவர் ஸ்ரீனி அழகப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் ஆண்டுதோறும் 15,245 புற்றுநோய் தொடர்பான இறப்புகள் ஏற்படுகின்றன.

அவற்றில் 798 இறப்புகள் மார்பகப் புற்றுநோயால் ஏற்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாணவர்களின் பொழுதுபோக்குக்கு நிதி அமைச்சர் பிமல் ரத்நாயக்க யோசனை

உயர்தரப் பரீட்சைகளில் தோற்றிய மாணவர்களுக்கு பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபட 5,000 ரூபா வழங்க வேண்டும் என சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க நேற்று முன்மொழிவு ஒன்றை நாடாளுமன்றத்தில் செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பேசிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க, மாணவர்கள் திரைப்படங்கள் மற்றும் நாடகங்களைப் பார்ப்பதற்கும், நல்ல இசையைக் கேட்பதற்கும், கடற்கரைகளைப் பார்வையிடுவதற்கும், கலாசார நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கும் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இளைய தலைமுறையினர் வயதுக்கு மாறும்போது இது ஒரு முக்கியமான படியாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஒதுக்கீடு கலாசார மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படக்கூடாது என்றும் சபை முதல்வர் பரிந்துரைத்துள்ளார்.





# போர்த்துக்கல் ஜனாதிபதியுடன் இலங்கை ஜனாதிபதி சந்திப்பு!

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, போர்த்துக்கல் ஜனாதிபதி மார்செலோ ரெபெலோ டி சூசா தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அலுவலகத்தில் அமெரிக்க நேரப்படி நேற்று பிற்பகல் நடைபெற்றது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய ஆகியோரும் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டனர்.

## அலைமகள் துதி

# அருள் புரிவாயே அம்மா இலக்குமி!

செல்வம் செல்வம் தேயாச் செல்வம்
தேடித் திரிகிறோம் தெரியவே இல்லை
அனைத்துச் செல்வமாய் ஆகியே இருக்கிறாய்
அம்மா லக்சுமே அடியைத் தொழுகிறோம்



நிறைந்த செல்வம் நீயே அம்மா
நினது அருளே அனைத்தும் அம்மா
அலைந்து திரிகிறார் செல்வந் தேடி
அவரின் மனத்தைத் திருத்திடு அம்மா

ஓய்வே இல்லா உழைக்கிறார் அம்மா
உழைத்து உழைத்துக் குவிக்கிறார் அம்மா
அருளை அன்பை மறக்கும் அவரை
திருத்திடு தாயே திருவடி சரணம்

வாழும் வரைக்கும் செல்வம் வேண்டும்
செல்வம் உன்னருள் பெற்றிட வேண்டும்
திருவருள் நிறைவுடன் செல்வம் சேர்ந்திட
அருள் புரிவாயே அம்மா இலக்குமி!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவித்திருக்கிறார்கள்.

ஆயினும் சட்ட மீறலாக இல்லாமல் – முறையான விதத்தில் – போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய போராட்டத்தின் மூலம் இந்தக் கட்டமைப்புகள் முன்னெடுக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியுமா என்பதற்குக் காலம்தான் பதில் கூற வேண்டும்.

எது, எப்படியாயினும் திட்டத்தை தொடரும்படியான அறிவுறுத்தலை வழங்கி விட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா அமெரிக்காவுக்குப் புறப்பட்டு விட்டார். ஜனாதிபதியின் அறிவுறுத்தல் கிடைக்கப் பெற்றமையை அடுத்து நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கும் நோக்கத்தோடு அது தொடர்பான பாரிய உபகரணங்கள் தாங்கிய பெரிய வாகனங்கள் தற்சமயம் திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து மன்னாரை நோக்கிப் புறப்பட்டு விட்டன என ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

பெரும்பாலும் இன்றிரவு அல்லது நாளை அவை சாரி சாரியாக மன்னாருக்குள் நுழையக்கூடும்.

கடந்த தடவை போல அந்த வாகன அணிகளை மன்னாருக்குள் நுழையவிடாமல் தடுத்து வழிமறித்து போராட்டம் நடத்துவது சாத்தியமா, அதன் சட்டவிளைவுகள் மிக மோசமாக அமையக் கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றெல்லாம் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இங்கு மன்னார் காற்றாலை அமைப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்துங்கள் என்று வழிகாட்டி விட்டு, வெளிநாட்டுக்குச் சென்றிருந்த மன்னார் ஆயர் பெரும்பாலும் நாளை மறுதினம்தான் மன்னார் திரும்புவார் எனத் தெரிகிறது. அவர் வந்த பின்னர்தான் இந்தப் போராட்டம் தொடர்பில் ஏதேனும் அர்த்தம் உள்ள மாற்றங்கள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்க முடியும்.

\+ + +

இப்போதெல்லாம் நீதிவான்கள், நீதிபதிகள் போன்றோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் – முறைப்பாடுகள் சம்பந்தமாக – நீதிச் சேவை ஆணைக்குழு விரைந்து நடவடிக்கை எடுப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதிவானாகக் கடமையாற்றிய பெண்மணி ஒருவருக்கு எதிராக மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கத்தினால் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டமையை அடுத்து ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்து முன்னெடுத்து நடத்தி வந்தது.

நேற்று முன்தினம் நீதிச் சேவை ஆணைக்குழுவில் இடம் பெற்ற விசாரணையின் போது சம்பந்தப்பட்ட நீதிவான், ஒரு நீதிபதி ஸ்தானத்தில் இருப்பவர் வெளிப்படுத்த வேண்டிய கண்ணியமான நடத்தையை வெளிப்படுத்தி இருக்காத குற்றச்சாட்டுக்கு ஏதுவான சான்றுகள் முற்படுத்தப்பட்டமையை தொடர்ந்து, அவரே தமது பதவி விலகல் கடிதத்தை உடனடியாக நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் கையளித்தார் எனத் தெரிய வருகின்றது. அன்றைய தினத்திலிருந்து – அதாவது நேற்று முன்தினத்திலிருந்து – அவர் பதவி விலகியவராகக் கருதப்பட்டார்.

இதனை அடுத்து நேற்றைய தினம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் சார்பில் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் மல்லாகம் நீதிமன்றுக்கு நேரில் பிரசன்னமாகி, பதவி விலகிய நீதிவானின் சமாதான அறை மற்றும் அதில் உள்ள பொருள்களைப் பொறுப்பேற்று நீதிமன்றப் பதிவாளரிடம் கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடிய சம்பந்தப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி, வெகுவிரைவில் புதிய நீதிவான் ஒருவர் நியமிக்கப்படுவார் என சட்டத்தரணிகளுக்கு உத்தரவாதம் வழங்கினார் என்றும் தெரிய வருகிறது.

## ட்ரம்ப் - அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டொனால்ட் ட்ரம்புக்கும் இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் இடம்பெற்றுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் சந்திப்பு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வின் போது இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, அங்கு உலக நாடுகளின் தலைவர்கள் பலரை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சந்தித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பாகிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய ஆகியோரும் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டனர்.









## தங்காலைக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கிடையில் இரு தரப்பு ஒத்துழைப்பின் பல்வேறு அம்சங்கள் மற்றும் இலங்கை அரசியலின் தற்போதைய நிலவரம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டன என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு – விஜேராமவில் உள்ள அரச இல்லத்தில் இருந்து வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, தங்காலை கால்டன் இல்லத்தில் தற்போது வசித்து வருகின்றார்.

மஹிந்த கொழும்பில் இருந்து வெளியேற முன்னர் அவரைச் சீனத் தூதுவர் சந்தித்திருந்தார். இந்நிலையில், இந்தியத் தூதுவர் தங்காலைக்குச் சென்று மஹிந்தவைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# சம்பத் மனம்பேரிக்கு நாளை வரை மறியல்



மித்தெனியவில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் அடங்கிய

கொள்கலன் தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்த சம்பத் மனம்பேரியை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு வலஸ்முல்ல நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மித்தெனியவில் உள்ள காணி ஒன்றில் இம்மாதம் 5 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, "கெஹெல் பத்தர பத்மே"வின் ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 50 ஆயிரம் கிராம் இரசாயனங்கள் அடங்கிய கொள்கலன் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சம்பத் மனம்பேரி, கடந்த 17 ஆம் திகதி காலை வலஸ்முல்ல நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

நீதிமன்றத்தில் சரணடைந்த சம்பத் மனம்பேரியை 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்த சம்பத் மனம்பேரி நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து நாளை 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வேண்டும்!

## சஜித் மீளவும் வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் நீதியான விசாரணையைக் கோருகின்றனர். எனினும், நிலைமை தற்போது பாரதூரமாகியுள்ளது.

ஜெனிவாவில் தற்போது நடந்து வரும் கலந்துரையாடலில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றின் தந்தை, சூம் தொழில்நுட்பம் மூலம் இணைந்து கொண்டு, இலங்கையில் நடந்து வரும் விசாரணைகளில் திருப்தி இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இது போன்ற விடயங்கள் நாட்டுக்குப் பொருத்தமில்லாத விடயங்கள் என்பதால், இங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றார்.



# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தால் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்

## தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கியமக்கள்சக்திஉள்ளிட்டஎதிரணிகள் ஓரணியில் திரண்டாதல் அதற்கு முழுஒத்துழைப்புவழங்கப்படும் என்று மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், "எதிரணிகள் ஒன்றிணைவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டால் நிச்சயம் அதனைச் செய்ய வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசு முன்னெடுக்கும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிக்கப்படும்.

தவறிழைக்கப்பட்டால் நிச்சயம் அவற்றை எதிர்ப்போம். மக்கள் வாக்களிக்கும் வரை அரசியலில் ஈடுபடும் எண்ணத்துடன்தான் இருக்கின்றேன்." - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறுவர் துஷ்பிரயோகம்

உலகளாவிய ரீதியில் சமூகத்தைப் பெரிதும் பாதிக்கும் - சகிக்க முடியாத - ஒரு விடயமாக சிறுவர் துஷ்பிரயோக விவகாரம் மாறி வருகிறது.

சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு என்பவற்றுக்கென விசேட சட்டங்கள் நாகரீக உலகில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் இன்றும் நூறு வீதம் இவை தவிர்க்க முடியாதவையாகவே சமூகத்தில் ஊடுருவிக் காணப்படுகின்றன.

நாடு முழுவதிலிருந்தும் தினந்தோறும் வெளியாகும் செய்திகளில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன. இது சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பரவலான பிரச்சினையை இலங்கை எதிர்கொள்கிறது என்பதை வெளிப்படையாக தெரியப்படுத்துகிறது.

இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் தொடர்பான ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் இதனைத் தெரிவித்துள்ளார். நேற்று நாடாளுமன்றத்தில் தண்டனைச் சட்டம் (திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு விவாதத்தின் போது அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் இந்தத் தகவலை வெளியிட்டார்.

குடியிருப்புகள், பாடசாலைகள், தடுப்பு மையங்கள் மற்றும் பொது சாலைகள் உட்பட பல்வேறு இடங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிறார்கள் என்று அமைச்சர் குறிப்பிட்டார். அமைச்சரின் கூற்றுப்படி கடந்த ஆண்டு 1,350 சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகியுள்ளனர். அதே நேரத்தில் இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் மட்டும் 1,126 முறைப்பாடுகள் பதிவாகி உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. முறைப்பாடுகள் பதிவாகாத - வெளியில் தெரியவராமல் தொடரும் - சிறுவர் துஷ்பிரயோகங்கள் இதிலும் விட அதிகமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

சிறுவர்களைக் கடத்தல், கட்டாயப்படுத்தி யாசகம் பெறச் செய்தல், பலவந்தமாக தொழிலுக்கு அமர்த்துதல், கல்வியை இடைநிறுத்துதல், கொடுமைப்படுத்துதல், பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துதல், பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்துதல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துதல், சட்டபூர்வமான பாதுகாவலர்களிடமிருந்து சிறுவர்களைப் பிரித்துக் கடத்துதல், பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்துதல், பாலியல் உறவுக்குத் தொடர்புகளைப் பெறுவதற்கு சிறுவர்களை தூதுவர்களாகப் பயன்படுத்துதல், சிறுவர்களைக் கவனிக்காமல் அந்தரிக்க விடுதல், 16 வயதுக்குக் குறைந்த சிறுமியை விபசாரத்திற்குப் பயன்படுத்துதல் எனப் பல்வேறு வகையான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகின்றன.

அனைத்து சிறுவர்களுக்கும் உயிர் வாழ்வதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்கும், சுதந்திரமாக இருப்பதற்கும், போதுமான கவனிப்பை பெறுவதற்கும், பாதுகாப்பான சூழலில் வளர்வதற்கும், கல்வியைப் பெறுவதற்கும் உரித்து உண்டு. எனினும் அந்த உரிமைகள் மீறப்படுவதில் சமூகம், அரசு மற்றும் சட்டம் ஆகிய அனைத்துமே தொடர்புபடுகின்றன.

வறுமை, மது, போதைப்பொருள், குடும்ப வன்முறை மற்றும் பாலியல் விரக்தி, சிலரின் மிகத் தவறான பாலியல் பழக்கவழக்கங்கள், தற்போதைய நவீன தொடர்பாடல் சாதனங்கள் மற்றும் தொடர்பாடல் வசதி முறைகள் போன்ற பல சமூக காரணிகள் சிறுவர் துஷ்பிரயோக குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடையவனாக உள்ளன.

இலங்கையில் வருடாந்தம் சுமார் ஒரு லட்சத்துக்கு அதிகமான குடும்ப வன்முறைச் சம்பவங்கள் பதிவாகின்றன எனக் கூறப்படுகின்றது. அவையும் சிறுவர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் அல்லது துஷ்பிரயோகங்கள் சமூகத்தில் மோசமடைய வாய்ப்பளிக்கின்றன.

சிறுவர் துஷ்பிரயோகத்தை சமூகத்தில் இருந்து ஒழிப்பது சமூகத்தின் பிரதான கடமையாகும்.



# ஒரு நாள் விடிவு வரும் பார்த்தீபன்..!

**தமிழ் மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரிக்கப்படுகின்றது.**


சிங்கள அடக்குமுறைக்குள்
தமிழினம் சிக்கித் தவித்த போது
விடிவு தேடிக் கொடுக்கப்
புறப்பட்ட ஊரெழு பெற்ற
பார்த்தீபன்...!

நெஞ்சில் வஞ்சமின்றி
தலைவன் அணியில்
நல்லதொரு போராளியாய்
மக்களை நேசித்தாய்
பார்த்தீபன்...!

யாரறிவர் காந்திய தேசம்
தமிழினத்துக்கே வஞ்சகம்
செய்யுமென - அகிம்சை
தேசத்திடம் நீதி கேட்டாய்
பார்த்தீபன்...!

ஐந்தம்சக் கோரிக்கைகளை
பாரத தேசத்துக்கு முன்வைத்து
பன்னிரு நாள் தேரோடும்
வீதியில் உண்ணாநோன்பிருந்தாய்
பார்த்தீபன்...!

யாரும் கண்டுகொள்ளவில்லை
மெழுகுவர்த்தியாய் உருகி தியாக தீபமானாய்
உன் கனவை நினைவில் கொண்டு
மலர் தூபி அஞ்சலிக்கின்றோம்
ஒரு நாள் விடிவு வரும் என
பார்த்தீபன்...!



- உருத்திரசிங்கம் கிரிசாந்தன் -




# மாநில அந்தஸ்து கோரி லடாக்கில் போராட்டம்; வன்முறையால் பதற்றம், 4 பேர் உயிரிழப்பு

யூனியன் பிரதேசமான லடாக்-குக்கு மாநில அந்தஸ்து கோரி தலைநகர் லே-யில் நடைபெற்ற போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் 4 பேர் உயிரிழந்தனர், 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மாநில அந்தஸ்து, ஆறாவது அட்டவணை அந்தஸ்து உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து லடாக்கில் உள்ள லே உச்ச அமைப்பு, கடந்த 1 ஆம் திகதி முதல் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது.

சுற்றுச்சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக் உள்ளிட்ட 15 பேர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், சோனம் வாங்சுக் உள்ளிட்ட இருவரின் உடல்நிலை மோசமானதை அடுத்து அவர்கள் இருவரும் நேற்று முன்தினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். தற்போது அவர்களின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே, தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி எல்.ஏ.பி. அமைப்பினர் நேற்று கடையடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர். மேலும், லே நகரில் உள்ள பா.ஜ.க. அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தை அடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அப்போது, போராட்டக்காரர்களில் ஒரு பிரிவினர் வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. பா.ஜ.க. அலுவலகத்தின் மீதும், பொலிஸார் மீதும் கற்களை வீசிய போராட்டக்காரர்கள், அங்கிருந்த பொலிஸ் வாகனத்துக்கும் தீ வைத்தனர்.

இதையடுத்து, தடியடி நடத்தியும், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் பொலிஸார் போராட்டக்காரர்களைக் கலைக்க முயன்றனர். இதில், 4 பேர் உயிரிழந்தனர். 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இதன் தொடர்ச்சியாக, அனைவரும் அமைதி காக்குமாறு சோனம் வாங்சுக் வேண்டுகோள் விடுத்துள்ளார். லடாக்கில் சமீப ஆண்டுகளில் இப்படி ஒரு வன்முறை ஏற்பட்டது இதுவே முதல்முறை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சீமானும், விஜயலட்சுமியும் மன்னிப்புக் கோர வேண்டும்

## உச்ச நீதிமன்றம் உத்தரவு



பாலியல் புகார் தொடர்பான வழக்கில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும், நடிகை விஜயலட்சுமியும் பரஸ்பரம் மன்னிப்புக் கோரி பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தன்னை திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றிவிட்டதாக நடிகை விஜயலட்சுமி, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான சீமானுக்கு எதிராக வளசரவாக்கம் பொலிஸில் கடந்த 2011 ஆம் ஆண்டு புகார் அளித்திருந்தார். அந்தப் புகாரின்பேரில் சீமான் மீது பொலிஸார் பல்வேறு பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கை ரத்து செய்ய முடியாது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அந்த உத்தரவை எதிர்த்து சீமான் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் பி.வி. நாகரத்னா, ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது விஜயலட்சுமி தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஷாதான் ஃபராஸத், ‘இது தொடர்பாக சீமான் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரத்தில் எங்கும் மன்னிப்பு கோரவில்லை’ என்றார்.

அதற்கு, சீமான் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கோபால் சங்கரநாராயணன், ‘கடந்த முறை உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த பின்பும்கூட சீமானுக்கு எதிராக விஜயலட்சுமி தொடர்ந்து காணொலி வெளியிட்டு வருகிறார். குறிப்பாக உச்ச நீதிமன்றத்தில் சீமான் என்ன செய்ய வேண்டும் என்றும் பேசியுள்ளார்’ என்றார்.

அதையடுத்து நீதிபதிகள், ‘இருவரும் தங்களது குற்றச்சாட்டுகளை திரும்பப் பெற்று பரஸ்பரம் மன்னிப்புக் கோரி இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்’ எனக் கூறி விசாரணையை இரு வாரங்களுக்கு தள்ளி வைத்தனர். மேலும், இந்த விவகாரம் தொடர்பாக சீமானும், விஜயலட்சுமியும் ஊடகங்களிலோ அல்லது சமூக வலைதளங்களிலோ எந்தப் பேட்டியும் தரக்கூடாது என்றும், இந்த உத்தரவை மீறினால் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் நீதிபதிகள் எச்சரித்தனர்.

# இந்தியா எப்போதும் உக்ரைனின் பக்கமே

## ஜெலன்ஸ்கி திட்டவட்டமாக தெரிவிப்பு



இந்தியா எப்போதும் உக்ரைனின் பக்கம் இருப்பதாக, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்துள்ள போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தான் மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஆனால், ரஷ்யாவிடம் இருந்து இந்தியா, சீனா போன்றவை மசகு எண்ணெய்யை கொள்வனவு செய்வதன் மூலம், இந்தப்போர்தொடர்ந்துகொண்டிருப்பதாகவும்ட்ரம்ப்சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், யுக்ரைனில் நடந்து வரும் போருக்கு இந்தியா மற்றும் சீனா நிதியளிப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே, இந்தியா எப்போதும் உக்ரைனின் பக்கம் இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர சீனா விரும்புவதாக தான் நினைக்கவில்லை.

அத்துடன், ஜனாதிபதி ட்ரம்ப், சீன ஜனாதிபதியின் அணுகுமுறையை மாற்ற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பியர்கள் இந்தியர்களுடன் நெருக்கமாக இருந்து வருகின்றனர்.

ரஷ்ய எரிசக்தித்துறை குறித்த தனது அணுகுமுறையை இந்தியா மாற்றிக்கொள்ளும் என்றும், சீனாவிடம் இருந்து இதே போன்ற நிலைப்பாட்டை எதிர்பார்க்க முடியாது என்றும் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# சீனாவை நோக்கி நகரும் மிகவும் ஆபத்தான புயல்





இந்த ஆண்டின் மிகவும் ஆபத்தான புயலாக கருதப்படும் ரகசா புயல், தற்போது சீனாவை நோக்கி நகர்ந்து செல்வதாக கூறப்படுகின்றது.

இந்தநிலையில், சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் 20 லட்சம் பேர் வரை, பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என சீன செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கும் மேற்பட்ட விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த ரகாசா புயல் மணிக்கு 200 முதல் 230 கிலோ மீற்றருக்கும் அதிக வேகத்தில் வீசக்கூடும் என சீனாவின் தேசிய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

முன்னதாக, ரகசா புயலினால், தைவானில் 17 பேர் உயிரிழந்துள்ளதுடன், வெள்ளம் போன்ற அனர்த்தங்களினால் இதுவரை 32 பேர் காயமடைந்துள்ளதாவும் பலர் காணாமல் போயுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காணாமல் போனவர்களை மதிப்பிடுதல் மற்றும் தேடுதல் பணிகள் தொடர்வதால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிலிப்பைன்ஸ் நாட்டில் ரகசா புயலில் சிக்கி 9 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

# சிறுவர்களை துன்புறுத்தினாரென எலோன் தந்தை மீது குற்றச்சாட்டு



உலக பணக்காரர்களில் முதல் இடத்தில் உள்ள ஈலோன் மஸ்க்கின் தந்தை எரால் மஸ்க் (வயது 79) மீது, ஐந்து சிறுவர்கள் மற்றும் வளர்ப்பு சிறுவர்கள் சிலருக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்துள்ளார் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தனது தந்தை மீது எழுந்துள்ள இத்தகைய குற்றச்சாட்டுக்களை எலோன் மஸ்க் மறுத்துள்ளார்.

அத்துடன், இத்தகைய குற்றச்சாட்டுக்கள் முட்டாள்தனமானவை, ஆதாரமற்றவை, போலியானவை என எலோன் மஸ்க்கின் தந்தை எரால் மஸ்க் தெரிவித்துள்ளார்.

எலோன் மஸ்க் டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய நிறுவனங்களையும் மற்றும் எக்ஸ் வலைத்தளத்தையும் நடத்தி வருகிறார்.

அண்மையில் எலோன் மஸ்க்கிற்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிற்கும் இடையே நடந்த வார்த்தை மோதல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், எலோன் மஸ்க்கின் தந்தை மீது எழுந்துள்ள இத்தகைய குற்றச்சாட்டுக்கள் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# பருத்தித்துறை நகரசபை அமர்வு ஒத்தி வைப்பு; விசேட கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுப்பு









பருத்தித்துறை நகரசபையின் ஐந்தாவது அமர்வு நேற்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நகரபிதா வின்சன் டி போல் டக்ளஸ் போல் தலைமையில் ஆரம்பமாகிடம்பெற்றது. இதில் நகரசபை செயலாளர் திருமதி தாரணி கஜரூபன் மற்றும் சபை உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நீதிமன்ற வீதியில் உள்ள வெள்ள வாய்க்காலினை மூடுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை விடுவித்து செயற்படுத்த ஒப்புதல் கோரியிருந்த நிலையில் பருத்தித்துறை புதிய மரக்கறி சந்தையில் தேங்கும் மழை வெள்ளத்தை வெளியேற்ற வாய்க்கல் அமைக்க வேண்டும் என்ற விடயத்தை முன்வைத்து தமிழரசு கட்சி, ஈ.பி.டி.பி, தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் உறுப்பினர்கள் எதிர் கருத்துகளை கூறி கடும் அமளியில் ஈடுபட்டதுடன் சபை நடவடிக்கையை தொடரமுடியாதவாறு குழப்பத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து காலை 10.15 மணியளவில் நகரபிதாவினால் சபை ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டு இந்த விடயம் தொடர்பில் விசேட கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்தார்.

நகரசபைகணக்காளருக்குகுழுநிலைலந்துரையாடலுக்கு நகரபிதாவினால் அழைப்புவிடுக்கப்பட்ட நிலையில் நகரசபை செயலாளரினால் அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து, தொடர்புடைய உயரதிகாரிகளுடன் நகரபிதாவினால் தெரிவிக்கப்பட்ட நிலையில் செயலாளரின் கடுமையான ஆட்சேபத்திற்கு மத்தியிலும் அனுமதி வழங்கப்பட்டது. இதன் காரணமாக சுமார் அரை மணி நேர இழுபறிக்கு பின்னர் கணக்காளர் பிரசன்னமாகி உறுப்பினர்களுக்கு விடயங்களை தெளிவுபடுத்தி இருந்தார். இதையடுத்து மீளவும் 11.15 மணியளவில் சபை நடவடிக்கை ஆரம்பமாகின.

இதன்போது புதிய மரக்கறி சந்தை கட்டடம் அமைக்கப்பட்ட போது மழை வெள்ள நீர் வெளியேறும் வாய்க்கால் அமைப்பு பொருத்தமற்ற முறையில் அமைக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டு அதற்கு பொறுப்பான நகரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மீது விசேட குழு ஒன்றினை அமைத்து விசாரணை மேற்கொள்வது என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த சபை அமைவதற்கு முன்னதாக நகரசபையினால் முன்னெடுக்கப்பட்ட, புதிய மரக்கறி சந்தையில் மின்விசிறிகள் பொருத்தப்பட்டது உள்ளிட்ட சில விடயங்களின் போது இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் தொடர்பில் நகரபிதாவினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்போது செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் எவரும் அதனை ஆட்சேபிக்காதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள், இளைஞர்களிடையே சீரழிவினை ஏற்படுத்தும் வகையில் பருத்தித்துறை துறைமுக பகுதியில் உள்ள இராணுவ சிற்றுண்டிச்சாலையில் சிகரட் விற்பனை கட்டுப்பாடின்றி இடம்பெற்று வருகின்றதுடன், பொதுச் சுகாதார பரிசோதகரது கண்காணிப்பு இன்றி இயங்கிவருவது தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றினை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. இவை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ட்ரம்பின் விசேட பிரதிநிதிக்கும் அநுரவுக்கும் இடையில் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான விசேட பிரதிநிதி, இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவராக பெயரிடப்பட்டுள்ள பிரதிநிதி மற்றும் வெள்ளை மாளிகை ஜனாதிபதி பணிக்குழாம் பணிப்பாளர் செர்ஜியோ கோருக்கும் இடையிலான சந்திப்பு அமெரிக்க நேரப்படி நேற்றுமுன்தினம் பிற்பகல் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி அலுவலகத்தில் நடைபெற்றது.



இந்தச் சந்திப்பில் வர்த்தக, வாணிப, சுற்றுலா மற்றும் முதலீடு உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் முக்கியமான துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதோடு அந்தத் துறைகளை மேலும் முன்னேற்றுவது குறித்தும் ஆராயப்பட்டது.

முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு பலமான மக்கள் ஆணையுடனான புதிய அரசு என்ற வகையில், பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்ட ஒரு வளமான பொருளாதார முன்னுரிமை அடிப்படையில் அமெரிக்காவுடன் ஒரு செயற்பாட்டுடனான மற்றும் மிக நெருக்கமான உறவைப் பேண எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல் உட்பட மக்களின் எதிர்காலத்துக்காக பொருளாதாரத்தின் நீண்ட கால ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்குத் தேவையான மறுசீரமைப்பு உள்ளிட்ட அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக சமமின்மையை நிவர்த்தி செய்தல், இரு தரப்பு வர்த்தகத்துக்கான தடைகளைக் குறைத்தல், நியாயமான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் வர்த்தக உறவுகளை உறுதி செய்வதற்காக ஒரு உடன்பாட்டை எட்டுதல் மற்றும் இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுகளின் முன்னேற்றம் தொடர்பில் இதன்போது இரு தரப்பினரும் மீளாய்வு செய்தனர்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி முன்னாள் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.






# தியாக தீபம் திலீபனுக்கு திருமலையில் நினைவஞ்சலி

தியாக தீபம் திலீபனின் 38 ஆம் வருட நினைவேந்தலை ஒட்டிய 10 ஆம் நாள் நிகழ்வுகள் நேற்று திருகோணமலை சிவன் கோவிலருகில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் வைக்கப்பட்டுள்ள இடத்தில் இடம்பெற்றது.

இந்நினைவேந்தல் நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு உணர்வு பூர்வ மாக மலர் அஞ்சலி செலுத்தினர்.






# வாழைச்சேனையில் மீன்பிடிக்கச் சென்றவர் காட்டு யானையின் தாக்குதலில் உயிரிழப்பு!



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பொண்டுகள் சேனை பூலாக்காடு சீல்லிக்கொடி பகுதியில் உள்ள கழி ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெரிய வேதம் பூலாக்காடு கிரான் பகுதியை சேர்ந்த 63 வயதுடைய 8 பிள்ளைகளின் தந்தையான மூத்த தம்பி சீனித்தம்பி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று முந்தினம் செவ்வாய்க் கிழமை காலை தனது வீட்டில் இருந்து பூலாக்காடு பகுதியில் உள்ள சீல்லிக் கொடி பகுதியில் உள்ள குழி ஒன்றில் மீன் பிடிப்பதற்காக சென்றிருந்தார். எனினும் இரவாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து அவரை உறவினர்கள் தேடி சென்ற போது அந்த பகுதியில் யானை தாக்குதலில் பலியான நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார் .

இதனையடுத்து வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்கு சென்ற கோறளைப் பற்று திடீர் மரண விசாரணை அதிகாரி வடிவேல் ரமேஷ் ஆனந்தன், மற்றும் பொலிஸெ சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# 7 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த சிறிய தந்தைக்கு 9 வருட கடுழியச் சிறை

## ரூ. 2 லடசம் நஷ்டஈடு வழங்கவும் மட்டு. மேல் நீதிமன்றம் தீர்ப்பு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 7 வயது சிறுமி ஒருவரை 2007 ஆம் ஆண்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்த சித்தப்பாவுக்கு முதலாவது குற்றத்துக்கு 2 வருட கடுழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும், இரண்டாவது குற்றத்திற்கு 7 வருடக் கடுழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவும் விதித்து மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார்.

2007 ஆம் ஆண்டு குறித்த 7 வயது சிறுமியின் தந்தையின் சகோதரனான 32 வயதுடைய சித்தப்பா பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டமையை யடுத்து அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் நீதிமன்ற பிணையில் வெளிவந்த நிலையில் அவருக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்து வழக்கு இடம் பெற்று வந்தது.

16 வயதுக்கு உட்பட்ட சிறுமியை கடத்தி சென்றமை மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுகள் சாட்சியங்கள், சான்றுபொருள்கள் மற்றும் சட்ட வைத்தியர் அறிக்கை மூலம் நீரூபிக்கப்பட்டு எதிரி குற்றவாளியாக கடந்த 11 ஆம் திகதி வியாழக்கிழமை இனம் காணப்பட்டார்.

பின்னர், வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை எடுத்து கொள்ளப் பட்டபோது இந்தத் தண்டனைகளை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.


# தீயணைப்புப் பிரிவு உட்பட முக்கிய தேவைகளை வவுனியா மாநகரசபைக்கு உடன் நிறைவு செய்க!

## சத்தியலிங்கம் எம்.பி. நாடாளுமன்றத்தில் கோரிக்கை

வவுனியா மாநகரசபையின் முக்கிய தேவைப்பாடுகளை உடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்திருந்தவையாவது:-

வவுனியா நகரசபையானது மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயம். ஆனால் வெறும் பெயர்ப்பலகையில் மட்டுமே அது மாநகரசபையாகவுள்ளது. ஒரு மாநகர சபைக்கான வளங்கள் அங்கு இல்லை. மாநகர சபைக்கான



ஆளணிகள் நிரப்பப்படவில்லை. வேலைப் பகுதியில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது. அன்றாட கழிவகற்றல் செயற்பாடுகளுக்கு போதுமான வாகன வசதிகள் இல்லை.

வவுனியா நகரம் வளர்ந்துவரும் நகரமாகும். அங்கு தீயணைப்பு பிரிவின் முக்கியத்துவம் தேவைப்படுகின்றது. எனினும் மாநாகரசபையில் தனியான தீயணைப்பு பிரிவு ஸ்தாபிக்கப்படவில்லை. தீயணைப்பு வாகனமொன்றும், அம்புலன்ஸ் வாகனமொன்றும் இருந்தாலும் கூட போதுமான ஆளணி இல்லை. இதே நிலைமை ஏனைய பிரதேச சபைகளிலும் காணப்படுகின்றன. எனவே மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக உள்ளூராட்சி மன்றங்களின் இயலுமையை மேம்படுத்த விசேட திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இந்த உயரிய சபையில் கோரிக்கை முன்வைக்கின்றேன். - என தெரிவித்தார்.

# மட்டு. வைத்தியசாலை மலசலகூடத்தில் பிரசவித்து குழந்தையை ஒளித்து வைத்த பெண் சிற்றூழியர்!

## உயிரிழந்த நிலையில் சிசு மீட்பு; தாயார் கைது



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் 35 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயான சுகாதார சிற்றூழியர் ஒருவர் சத்திர சிகிச்சை பிரிவின் மலசல கூடத்தில் குழந்தையைப் பிரசவித்து, சிசுவை கட்டிலின் கீழ் மறைத்து வைத்திருந்த நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளாது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நிலையில் குழந்தை மீட்கப்பட்டமையை அடுத்து அந்தப் பெண் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது:-

இந்த வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை பிரிவில் கடமையாற்றி வரும் சிற்றூழியரான பெண் திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளின் தாயாராவார். இவர் கடந்த திங்கட்கிழமை வழமை போல வைத்தியசாலையில் கடமை யாற்றி வந்துள்ளார்.

இதன் போது அவருக்கு வயிறு வலிப்பதாக அங்குள்ள மலசல கூடத்திற்கு சென்று ஒருவருக்கும் தெரியாமல் பெண் குழந்தை ஒன்றை பிரசவித்து, அதனை பெட்டி ஒன்றில் மூடிக் கட்டிலின் கீழ் மறைத்து வைத்துவிட்டு அங்கு கடமை யாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு இரத்த போக்கு அதிகரித்ததையடுத்து, அவரை அவதானித்த தாதியர் ஒருவர் அவரை வார்டில் அனுமதித்துள்ளார். அவரைச் சோதனை செய்த வைத்தியர்கள் அவர் குழந்தை பெற்றுள்ளமையைக் கண்டறிந்து கொண்டனர். பெற்றெடுத்த குழந்தையை அவர் பெட்டி ஒன்றில் போட்டு மூடிக் கட்டிலின் கீழ் மறைத்து வைத்திருந்த நிலையில் குழந்தை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டது.

இந்தப் பெண் சிற்றூழியரின் கணவரும் அந்த வைத்தியசாலையில் சிற்றூழியராகக் கடமையாற்றி வருகிறார் எனவும், கணவருக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட மன கசப்பு காரணமாக கணவனை கடந்த ஜூன் மாதத்தில் இருந்து அவர் பிரிந்து வாழ்ந்து வருகிறார் எனவும், இந்த நிலையில் அந்தப் பெண் கர்ப்பம் தரித்து, முழுமையாக 38 வாரங்கள் கொண்ட, 2 கிலோவும் 485 கிராம் நிறை கொண்ட பெண் குழந்தையைப் பிரசவித்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

அவர் கர்ப்பிணியாக இருந்தமை அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எவருக்கும் தெரியாது எனவும், இந்த நிலையில் அவர் குழந்தையை உயிருடன் பிரசவித்து பெட்டியில் போட்டு மறைத்து வைத்திருந்திருக்கின்றார் எனவும் கூறப்படுகின்றது.

கணவனுக்குத் தான் அந்தக் குழந்தை பிறந்ததாகவும், கணவர் ஏற்கனவே இரண்டாவது பிள்ளை தனக்கு பிறக்கவில்லை என அடிக்கடி தெரிவித்து வந்த நிலையில் இந்தக் குழந்தை கர்ப்பம் ஏற்பட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற அவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை குழந்தையின் மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்பு பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளதாகவும், உயிரிழந்த குழந்தை தனக்கு பிறக்கவில்லை என பிரிந்துள்ள கணவன் தெரிவித்ததையடுத்து குழந்தையின் மற்றும் தந்தையுடைய இரத்த மாதிரியை பெற்று மரபணுப் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் அறிவிப்பு

# மன்னாரில் காற்றாலைகள் அமைக்கும் முடிவுக்கு எதிராகப் பெரும் போராட்டம்

### வெடிக்கும் என எச்சரிக்கை; மாவட்டச் செயலகம் மீதும் சீற்றம்




**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் காற்றாலைத் திட்டங்களை தொடர்வது ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவாக இருந்தாலும் எமது மண்ணையும் வளங்களையும், உரிமையையும், பாதுகாக்க போராட்டங்களைத் தொடர்வது எமது உரிமை என்றும்,சில தினங்களில் மாவட்டம் தழுவிய ரீதியில் பாரிய போராட்டம் வெடிக்கும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் எச்சரித்துள்ளார்.

மன்னார் போராட்டக்களத்தில் நேற்றுப் புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் இன்று (நேற்று) புதன்கிழமை 53 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது தொடர்பான செய்த அனுப்பப்பட்டுள்ளது. மன்னாரில் மேற்படி 14 காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் பணிகளை நிறுத்தத் தேவையில்லை, அதற்கான பணிகளை தொடர்ந்து முன்னெடுக்குமாறும், அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மற்றும் முன்னர் ஏற்பட்ட பாதிப்புக்களையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற கட்டளையையும் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

எதை வைத்து இந்த அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்று எமக்கு தெரியவில்லை. பல முறை இந்தத் திட்டம் குறித்து அதிகாரிகளுடனும், அமைச்சர்களுடனும், ஜனாதிபதியுடனும் தொடர்பு கொண்டு மக்களுடைய கருத்துக்களையும், எங்களுடைய கருத்துக்களையும் முன் வைத்தோம்.

எனினும் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காமல், தான்தோன்றித்தனமாக தனது சுய முடிவை எடுத்துள்ளமை நம்பியிருந்த எமக்கு மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

வாழ்வது எமது உரிமை. அதை யாரும் பறிக்க முடியாது. அந்த உரிமைக்காக நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம். எமது போராட்டம் விரிவடைகிறது என்பதை உங்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகின்றோம். எமது மூன்று கோரிக்கைகள் நிறைவேறும் வரை எமது போராட்டம் தொடரும். மாவட்ட ரீதியில் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பாரிய போராட்டமாக மாறவுள்ளது.

நாங்கள் சட்டத்தை மீறுகின்ற போராட்டமாக – ஏனையவர்களுக்கு இடையூறை ஏற்படுத்துகின்ற போராட்டமாக – இப்போராட்டம் ஒருபோதும் அமையாது.

இவற்றுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் நாங்கள் முன்னெடுத்து வருகின்ற போதும், எமது கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

எமது மன்னார் மாவட்டச் செயலகம், அரச அதிபர் மற்றும் அவருடன் கடமையாற்றுகின்ற அதிகாரிகளுடைய செயல்பாடுகள் எமக்கு மிகவும் கவலையை ஏற்படுத்துகின்றன.

இந்தக் கடிதம் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் நேற்று மாலை ஒருவரை அனுப்பி இக்கடிதத்தை பெற்றுக் கொண்டுள்ளோம். மிகவும் வேதனையான விடயமாக அமைந்துள்ளது.

கடந்த 40 நாள்களாக இடம் பெற்ற வேலைத்திட்டங்களை மாவட்டச் செயலகம் கண்காணிக்கவில்லை என்பதை இவ்விடத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டச் செயலகமும்,அதிகாரிகளும் இத்திட்டங்களுடன் ஒத்துப்போகின்றார்களா?என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது. மக்களை அழிக்கும். மக்களின் வாழ்விடங்கள் பறிக்கின்ற, இத்தீவை இல்லாது செய்கின்ற செயல்பாடுகளுடன் அதிகாரிகள் அனைவரும் இணைந்து போகின்றார்களா என்கிற சந்தேகமும் எழுந்துள்ளது.

அவர்களின் செயல்பாடு மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. மக்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து எமது மண்ணையும், வளங்களையும், உரிமையையும் பாதுகாக்க எமது போராட்டம் தொடரும். இனி வரும் நாள்களில் இப்போராட்டம் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படும்.

எதிர்வரும் திங்கட்கிழமை மன்னாரில் மாவட்ட தழுவிய ரீதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு எமது சக்தியை இந்த அரசுக்கு காண்பிக்க வேண்டும். ஜனாதிபதி தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளார் என்பதே மிகவும் கவலைக்குரிய விடயம்.

மக்களை பாதிக்காத வகையில் நடவடிக்கைகளை எடுப்போம் என அனைத்து அதிகாரிகளும் தெரிவித்திருந்தனர். ஆனால் ஜனாதிபதியினுடைய அறிவித்தல் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. அது ஜனாதிபதியின் முடிவாக இருக்கின்ற நிலையில்,எங்களுடைய முடிவு எங்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்ளுவோம் என்ற ஒரு முடிவு தான்.

எனவே இந்த போராட்டக் களத்தில் இருந்து சட்டங்களை மீறாது எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம்.

சட்ட ரீதியாக மூன்று நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். கனிய மணல் அகழ்விற்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கையை முன்னெடுத்து வருகிறோம். 14 காற்றாலை திட்டங்களுக்கு எதிரான இரு வழக்குகளை தாக்கல் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- என அவர் மேலும் தெரிவித்தார்.



# பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க அமைச்சரவை ஒப்புதல்

(ந.லோகதயாளன்)

பரந்தனில் அமைந்திருந்த இரசாயனத் தொழிற்ணாலையை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கில் முதலீட்டாளர்களிடம் விண்ணப்பம் கோரப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் பரந்தனில் இயங்கி, போரின காரணமாக அழிவடைந்த இரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பம் கோருவதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2025-09-22 இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த ஒப்புதல் இடம்பெற்றுள்ளது. இதில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை இயக்கி, இங்கே குளோரின் மற்றும் காஸ்டிக் சோடாவை உற்பத்தி செய்து, குளோரின் இறக்குமதிக்காக செலவு செய்யப்படும் அந்நிய செலாவணியை மீதப்படுத்துவதோடு 95 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பினை வழங்க முடியும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



# வென்னப்புவ விபத்தில் ஒருவர் சாவு





(உடப்பு க.மகாதேவன்)

சிலாபம் கொழும்பு வீதியில் வென்னப்புவ நயினாமடம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒருவர் மற்றுமொரு லொறியுடன் மோதி உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மரக்குற்றிகளை ஏற்றிக் கொண்டு லொறி வீதியில் சென்று கொண்டிருந்த சமயம் திடீரென மோட்டார் சைக்கிள் குறுக்கே செலுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்தப் பரிதாபகரமான விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து பற்றிய மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








# முறக்கொட்டான்சேனை படையினரின் முகாம் 35 ஆண்டுகளின் பின்னர் முற்றாக அகல்கிறது!

## 30ஆம் திகதி இடம் கையளிப்பு என்கிறார் சிறிநேசன் எம்.பி.



**( வி.ரி.சகாதேவராஜா)**

35 ஆண்டுகளின் பின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முறக்கொட்டான்சேனை படைமுகாம் முற்றாக அகல்கிறது. எதிர்வரும் 30 ஆம் திகதி கட்டடக் கையளிப்பு இடம்பெறலாம்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

முறக்கொட்டான்சேனை படை முகாம் மூடுதல் தொடர்பாக அவரிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

படையினர்,1990 ஆம் ஆண்டில் இருந்து முறக்கொட்டான்சேனை பாடசாலையில் முகாமை அமைத்து இயங்கி வந்தனர்.

அந்த முகாம் பல தமிழர்களின் கண்ணீர்க் கதைகளுக்குக் காரணமாக இருந்தது.

2017 காலப்பகுதியில் மக்களின் கோரிக்கைகளை அப்போதைய மீள் குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் அவர்களுக்குக் கொண்டு சென்றேன்.

அதற்கமைய இராணுவ முகாமை அகற்றி பாடசாலையை விடுவிப்பதுடன், அங்குள்ள காணிகளில் மக்களுக்கான வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கணிசமான காணிகளை மீட்டு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இராணுவக்கட்டுப்பாட்டில் இருந்த கணிசமாக காணிகள் மீட்கப்பட்டன. ஆனால், குறிப்பிட்ட எண்ணிகை இராணுவத்தினர் வரை பாடசாலையில் இருந்தனர். எனினும் தமக்குரிய காணிகளை வழங்குமாறு மக்கள் சார்பாக நாம் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரினோம்.

இருந்தாலும் அந்த இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலை கொண்டு இருந்தனர். இது பற்றி நாம் பல தடவைகள் உரிய அமைச்சர்கள், ஜனாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்தோம்.

காலம் கடந்த நிலையில் இன்று (நேற்று) மீதி இராணுவத்தினர் முழுமையாக வெளியேறி உன்னிச்சை இராணுவ முகாமுக்குச் செல்கின்றனர் எனத் தகவல் கூறுகிறது.

மக்களின் போராட்டம், எமது முயற்சிகள், அழுத்தங்கள் மூலமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் போதும் இவ்விடயம் கூறப்பட்டது.

இதே போல் தாண்டியடி அதிரடிப் படைமுகாம், குருக்கள் மடம் இராணுவ முகாம், வவுணதீவுப் பொலிஸ் நிலையம் போன்றவை துயிலும் இல்லம், பாடசாலை நிலம், பிரதேச சபை வளாகம் என்பவற்றில் இயங்கி வருகின்றன. அவையும் அகற்றப்பட வேண்டியவையாக உள்ளன.

இவற்றில் இருந்தும் படையினர் வெளியேற வேண்டும் என்பதே எமது அழுத்தமான கோரிக்கையாகும்.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகளாகியும் யுத்தமில்லாத மண்ணில் படையினரின் இருப்பு என்பது தமிழ்மண் மீதான ஆக்கிரமிப்பாகவே அமைகின்றது.

காலம் கடந்தாவது படைமுகாம் விலக்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும். அதற்காகவும், எதிர்காலத்திலும் முகாம்களை விடுவிப்புச் செய்வதற்காகவும் நன்றிகளைக் கூறுகின்றோம். ஆனால், அம்முகாமில் வதைக்கப்பட்ட, கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியையும் எதிர்பார்த்து நிற்கின்றோம். – என்றார்.

# தமிழ், சிங்கள மீனவர்கள் சங்கங்கள் இணைந்து திருமலையில் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம்!





(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, உள்துறைமுகக் கடலில் கட்டுவலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வலைகளில் இருந்து மீன்கள் திருடப்படுவதை தடுத்து நிறுத்தக் கோரியும், திருடர்களை சட்டரீதியாக தண்டிக்குமாறு கோரியும் நேற்று தமிழ் மற்றும் சிங்கள மீனவர் சங்கங்கள் இணைந்து உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசடி புனித சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த இப்போராட்டத்தை தொடர்ந்து தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை, மீனவர் சங்க பிரதிநிதிகள் திருகோணமலை மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளரிடம் கையளித்தனர்.

இப்போராட்டத்தின் போது கருத்து தெரிவித்த சங்கத்தின் முன்னாள் தலைவரும்,தற்போதைய ஆலோசகருமான இ.பாக்கியராசா கூறுகையில் –

"உள்துறைமுக கடற்பரப்பில் எம்மால் மேற்கொள்ளப்படும் கட்டுவலைத் தொழிலுக்கு, இப்பகுதியைச் சேர்ந்த ஒரு சிலரால் பின்வரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

1.எமது மீனவர் சங்க அங்கத்தவர்களால் 56 இடங்களில் கட்டுவலை அமைக்கப்பட்டு மீன்பிடி நடைபெறுகின்றது.

2.மேற்படி கட்டுவலைகளில் உள்ள கூடுகளில் நிற்கும் கணவாய் மீன்களை சிலர் திருடுகின்றனர்.

3.கணவாய்களை பிடிப்பதற்கென அவர்கள் பயன்படுத்தும் விசேட தூண்டிலினால் எமது கட்டுவலைகள் சேதமடைகின்றன.

4.வலைகள் சேதமடையும் போது கூட்டில் உள்ள மீன்கள் வெளியேறி விடுகின்றன.

5.இதனால் வலைகள் சேதமடைவதுடன், மீன்கள் வெளியேறுவதால் வருமானம் முழுவதும் இழக்கப்படுகின்றது.

எனவே இவ்வாறு திருட்டில் ஈடுபடுபவர்களை சட்டரீதியாக தடுக்கவும், திருடர்களுக்கு உரிய தண்டனை வழங்கி திருட்டுக்கள் தொடராது இருப்பதை உறுதிப்படுத்துமாறும் நாங்கள் உரிய அதிகாரிகளை வேண்டுகின்றோம்.

இந்த உள்துறைமுகக் கடற்பரப்பில் 1935 ஆம் ஆண்டு முதல் நான்கு தலைமுறையாக இந்தக் கட்டுவலைத் தொழில் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் பிளான்ரன் பொயின்ட் முகாமை அண்மித்த கடற்பரப்பில் இருந்து கடற்படை முகாம் வரையிலான கடல் பகுதியில் 64 இடங்களில் கட்டு வலை அமைக்கப்பட்டு மீன்பிடி நடைபெற்று வந்தது.

உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலத்தில் பாதுகாப்பு காரணங்களின் நிமித்தம், கட்டுவலைகளின் எண்ணிக்கை 56 ஆகக் குறைவடைந்தது. கடற்படை முகாமை அண்மித்த கட்டுவலைகள் அகற்றப்பபட்டன.

1935 ம் ஆண்டு முதல் இக்கட்டு வலைத் தொழில் இப்பகுதியில் செய்யப்பட்டு வந்த போதும்,1993 ஆம் ஆண்டில் முதல் முறையாக இத்தொழிலுக்கென அனுமதிப்பத்திரம் கடற்றொழில் அமைச்சால் வழங்கப்பபட்டது. அது வருடாந்தம் புதிப்பிக்கப்பபட்டு வருகின்றது.

ஆழம் குறைந்த கடற்பரப்பில் மட்டுமே இக்கட்டுவலைத் தொழில் செய்ய முடியும்.

2019 ஆம் ஆண்டின் பின்னர் சிலர் எமது கட்டு வலைகளில் கணவாய்களைத் திருட தொடங்கினர். இதனால் முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கியது.

உள்துறைமுகப் பகுதியில் தூண்டில் மீன்பிடி. வலைபயன்படுத்தி மீன்பிடித்தல், கரைவலை மீன்பிடி என்ற மேலும் மூன்று வேறு மீன்பிடித் தொழில்களும் நடைபெற்று வருகின்றன.

கட்டுவலைத் தொழில் மேற்படி மூன்று தொழில் முறைகளுக்கு இடையூறு ஏதும் ஏற்படுத்தாது நடைபெற்று வருகின்றது. அதே வேளை மேற்படி மூன்று மீன்பிடியாளர்களால் கட்டுவலைத் தொழிலுக்கு இதுவரை எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்நிலையில் எமது கட்டுவலைகளில் மீன்களை(கணவாய்) திருடும் சிலரை பலமுறை கையும் களவுமாக பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளோம். ஆனால் அடுத்த நாளே அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு வெளியில் வந்து மீண்டும் திருட்டில் ஈடுபடுகின்றார்கள்.

இது பற்றி கஸ்தூரிநகர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அறிவித்தோம். ஆனால் "திருடர்களைத் எங்களால் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது, நீங்கள் சட்டரீதியாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள், அதற்கு நாங்கள் தடையில்லை" என்று அந்த சங்க நிர்வாகிகள் எழுத்து மூலம் எமக்கு அறிவித்துள்ளனர்.

இம்முரண்பாடுகள் தொடரும் நிலையில் அது இருபகுதியினருக்கும் இடையில் பெரும் மோதல் நிலையை ஏற்படுத்தக்கூடும் என்றும் நாங்கள் அஞ்சுகின்றோம். எனவே மேற்படி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பின்வரும் தீர்வுகளை எமக்கு வழங்கி இவ் முரண்பாட்டு நிலையை முடிவுக்கு கொண்டு வர உதவுமாறு வேண்டுகின்றோம் உரிய அரச அதிகாரிகளை வேண்டி நிற்கின்றோம்.

தீர்வுகள் –

1.ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையான காலத்தில் கணவாய் மீன்கள் கரையை நோக்கி வரும். இக்காலப்பகுதியில் தான் கணவாய் திருட்டு அதிகளவில் இடம்பெறும். எனவே இது முற்றாக தடுக்கப்படல் வேண்டும்.

2.திருட்டில் ஈடுபடுபவர்களுக்கு சட்டரீதியாக உச்சபட்சத் தண்டனை வழங்கப்படல் வேண்டும்.

3.திருட்டின் போது கட்டுவலை சேதமாக்கப்பட்டால் அதற்குரிய முழுமையான நட்ட ஈடும் திருட்டில் ஈடுபட்டவரால் உரிய கட்டுவலை உரிமையாளருக்கு வழங்கப்படல் வேண்டும்.

4.உள்துறைமுக கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் கட்டுவலை,தூண்டில் முறை, வலைத்தொழில், கரைவலைத் தொழில் என்பவற்றை சுதந்திரமாகவும், எவருக்கும் மற்றைய தொழில் செய்பவரால் எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தப்படாமலும் இருப்பதற்கேற்ற ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தலும், அதனை நடைமுறைப்படுத்திக் கண்காணிப்பதும்.

இறுதியாக எமது பாதிப்புக்களையும் அவற்றிற்கானதீர்வுகளையும்முன்வைத்து நடக்கும் இப்போராட்டம் மூலம் வெற்றி கிடைக்காவிட்டால் அடுத்து நீதித்துறையிடம் நேரடியாக முறையிட எண்ணியுள்ளோம். – என்று கூறினார்.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை எப்போது ஒழிக்கப்படும்?

## நாடாளுமன்றத்தில் சஜித் கேள்விக்கணை



"திசைகாட்டியின் கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம், அரசமைப்பு திருத்தத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது எப்போது?"

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றும்போது கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைக் குடியரசின் இறையாண்மை மக்களை அடிப்படையாகக் கொண்டே அமைந்து காணப்படுகின்றது. இறையாண்மையைத் துறக்க முடியாது என்று இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசமைப்புச் சட்டம் கூறுகின்றது.

மக்களின் இறையாண்மையை உட்சபட்சமாகப் பலப்படுத்த, சட்டவாக்கத் துறை, நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகியவை பரஸ்பர புரிதலுடனும் சுயாதீனமாகவும் செயற்பட வேண்டும்.

பெரும்பான்மை அதிகாரத்தைக் கொண்ட அரசின் கீழ் இந்த நிறுவனக் கட்டமைப்புகளின் சுதந்திரம் தடைப்படுவது இயல்பானதோடு, இந்த அரசின் கீழும் இதில் மாற்றத்தைக் கண்டு கொள்ள வாய்ப்பில்லை என்றே புலப்படுகின்றது.

அரசு தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்திருந்ததன் பிரகாரம், அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்று அவர்கள் கூறினாலும், இன்னும் அப்படிப்பட்ட ஒரு விடயத்திற்கு எந்தத் தயார் நிலையும் இல்லை என்றே தெரிகின்றது.

மக்களின் இறையாண்மையைப் பாதுகாப்பதில் அரசின் நேர்மையைச் சோதிப்பதற்கான அளவுகோல்களாக அமைந்து காணப்படுவன, அவற்றின் செயற்றிறனை அதிகரிக்க அறிமுகப்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் முற்போக்கான சீர்திருத்தங்கள் என்பனவாகும். இதன் பிரகாரம், நான் பின்வரும் கேள்விகளை எழுப்புகின்றேன். இவற்றுக்கு உரிய பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கின்றேன்.

01. "வளமான நாடு, அழகான வாழ்க்கை" என்ற கொள்கை அறிக்கையில் பக்கம் 194 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம், அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள அரசு இன்னும் எதிர்பார்க்கின்றதா? ஆமெனில், இந்த நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா? அரசமைப்பு திருத்தச் செயற்பாட்டில் இந்த நாடாளுமன்றத்தை எப்போது ஈடுபடுத்திக் கொள்வீர்?

02. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது குறித்து அரசின் கருத்து நிலைப்பாடு யாது?

03. அரசு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க நடவடிக்கை எடுத்தால், இதற்கான கால எல்லையை இந்தச் சபைக்குச் சமர்ப்பிப்பீர்களா?

04. அரசு, மாகாண சபைத் தேர்தலை எப்போது நடத்த எதிர்பார்க்கின்றது?

05. மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்தும் எல்லை நிர்ணய நடவடிக்கையுடன் சிக்க வைத்துத் தாமதப்படுத்துவது அரசின் நிலைப்பாடா ? இல்லையென்றால், பழைய (விகிதாசார) முறையின் கீழ் தேர்தலை நடத்துவது தொடர்பான அரசின் நிலைப்பாட்டை இந்தச் சபைக்குத் தெளிவுபடுத்துவீரா?

06. நீதித்துறைக் கட்டமைப்பின் மீது இழக்கப்பட்ட பொதுமக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதாக தற்போதைய அரசின் கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இற்காக வேண்டி, அரச சார்பில் வழக்கு நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வெளியே மாகாண ரீதியாக அரசின் பிரதான வழக்குரைஞர் காரியாலங்களை நிறுவுவோம் என்றும் தற்போதைய அரசின் கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதனை எப்போது எப்போது நிறைவேற்றுவீர்கள்? இது தவிர, கூடிய மட்டத்தில் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்த வழக்கு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட சில நீதிபதிகளினது இடமாற்றம், சேவை இடை நிறுத்தம், பதவி உயர்வு வழங்குவது போன்ற விடயங்கள் தற்சமயம் சமூகப் பேசு பொருளாக காணப்படுகின்றன. இது குறித்த அரசின் மதிப்பீடுகள் யாவை?"

– என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் -25.09.2025




இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். மேலும் உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.

இன்று உங்களுக்கு தோள்களில் வலி ஏற்பட வாய்புள்ளது. சளி மற்றும் இருமல் ஏற்படவும் வாய்ப்புள்ளது




உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். நீங்கள் பல் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று அமைதியாக இருக்க வேண்டும். நீங்கள் பதட்டப்படும்படியான சூழ்நிலைகள் உருவாகும். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம். உங்களுக்கு பிரியமானவர்களுடன் உரையாடும் போது பதட்டபடாமல் கவனமாக பேசுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் பிரியமானவருடன் நட்பாகவும், சகஜமாகவும் பழக வேண்டும்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. பணத் தட்டுப்பாடு காரணமாக பணம் கடன் வாங்க நேரும்.

உங்கள் ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்துங்கள். ஒவ்வாமை காரணமாக சளி ஏற்படலாம்.




இன்றைய நாள் சாதகமாக இருக்காது. இன்று யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்களது பலவீனங்களை பலங்களாக மாற்ற முயற்சி செய்யுங்கள்.

பணிகளில் தவறுகள் நேரலாம். எனவே பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் மன நிலையில் காணப்படும் மாற்பாடு காரணமாக உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். உங்கள் துணையை மகிழ்விக்க முகத்தில் புன்னகையை கொண்டிருங்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது.எனவே இருக்கும் பணத்தைக் கொண்டுநிர்வகிக்கஉங்களைதயார்படுத்திக்கொள்ளவேண்டும்.

இன்று மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாளை உங்களுக்கு சாதமாக்கிக் கொள்ள பொறுமை தேவை. இன்று அசௌகரியங்கள் காணப்படும். இன்று திட்டங்களை தீட்டி அதனை நம்பி செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் வேலையை உங்கள் மேலதிகாரிகள் மதிப்பிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் படைப்பாற்றல் காணப்படும்.

உங்கள் உள்ளத்து ஏமாற்றங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே பணத்தை கவனமான முறையில் செலவு செய்ய வேண்டும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இன்றைய நாளை சிறப்பாக பயன்படுத்துவீர்கள், புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

சிறிய கடன் பெறுவதன் மூலம் உங்கள் பணத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்துகொள்வீர்கள். இருக்கும் பணத்தை குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படுகின்றது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.




பல தடைகளுக்கு பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அதிக மன உளைச்சல் காரணமாக கால்களில் வலி காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -25.09.2025




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.

வலிமை மற்றும் ஆற்றல் காரணமாக சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இன்று அனுசரணையுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் கடின உழைப்பின் மூலம் உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். உங்களுக்கு பிரியமான வர்களை அழைத்து உங்கள் வீட்டில் விருந்து கொடுப்பீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை பொறுமையாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று கடன் வகையில் பண வரவு காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க பணத்தை சேமிக்கவும்.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். தைரியமும் உறுதியும் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் மற்றும் திருப்தி காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இன்று உங்கள் பணியாற்றும் முறை சிறப்பாக இருப்பதன் காரணமாக சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் மிகவும் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். தேவையான சமயத்தின் போது உங்களிடம் பணம் இருக்கும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

பெரிய அளவிலான ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது. ஆனால் சிறிது சோர்வுடன் காணப்படுவீர்கள்




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகா மேற்கொள்வது நல்ல பலனைத் தரும்.

# பருத்தித்துறையில் சகல வர்த்தக நிலையங்களையும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுவதற்கு நடவடிக்கை





பருத்தித்துறை நகர் பகுதியில் இயங்கி வரும் சகல வர்த்தக நிலையங்களும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்படுவதற்கு பருத்தித்துறை வர்த்தக சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பருத்தித்துறை நகர் பகுதியில் இயங்கி வரும் அத்தியாவசிய அவசர தேவைகளுடன் தொடர்புடைய உணவகங்கள், மருந்தகங்கள், சைக்கிள் திருத்தகங்கள் தவிர்ந்த ஏனைய சகல வர்த்தக நிலையங்களையும் ஞாயிற்றுக்கிழமை தோறும் மூடுவதற்கு பருத்தித்துறை வர்த்தக சங்கம் அண்மை நாள்களில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

துறைசார்ந்த வர்த்தகர்களுடன் தனித் தனியான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு எல்லோரது ஆதரவினையும் வர்த்தக சங்கத்தினர் கோரியிருந்தனர்.

பலசரக்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் வியாபாரிகளுடனும் பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்த நிலையில் நேற்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தித்துறை வர்த்தக சங்கத்திற்கு உட்டுப்பட்ட சகல வர்த்தக நிலையங்களையும் மூடுவது எனவும் விசேட பண்டிகை தினங்களை அண்மித்து வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் வியாபார நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு அனுமதிப்பது எனவும் இந்த நடைமுறையானது வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் அமுலுக்கு கொண்டு வருவது எனவும் ஏகமனாதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.